| சார்பு நீதிமன்றம், மணப்பாறை |
|---|

| OS.No.283/2020 | Date:12.06.2026 |
|---|---|

| பெயர்.சவரியம்மாள் | த/பெ. சேசுதாஸ் |
|---|---|

(சாட்சி வா.சா.3 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப் படுகிறார்.)

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும் சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்து எந்த கிராமத்தில் என்ன சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் என்று தெரியுமா என்றால் பழையக்கோட்டை கிராமம், சர்வேஎண்.108, 2-3/4 ஏக்கர், நிரூபண வாக்குமூலத்தில் சர்வே எண் .108/3A என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் வாதி எனக்கு உறவினரா என்றால் எனது உடன் பிறந்த சகோதரன் . இந்த வழக்கின் 11,12,13 பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் வாங்கியுள்ளார் . அவர்கள் தான் மேற்படி சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம் . வாதி எனது சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

WEBCOPY